**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No. 139/2019**

**10.07.2025. அ.சா.3 காவியா த.பெ.சேகர்**

**Accused present.**

**எதிரிகள் தரப்பில் 311 குவிமுச மனு அனுமதிக்கப்பட்டு அ.. சா. 3 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

சாட்சி சிறுமி என்பதால் அவர்முதல் விசாரணை செய்தபோதே அவர் கேள்விகளை புரிந்துகொண்டு பதில் அளிக்கும் மனவளர்ச்சி அடைந்துள்ளார் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

நான் கல்லூரி இரண்டாம் ஆண்டு படிக்கிறேன் . ரேகா என்னுடைய சித்தி என்றால் சரிதான் . சம்பவம் நடந்த நேரம் இருட்டாக இருந்த நேரம் என்று சொன்னால் மாலை 7 மணி. எங்களுடைய நிலங்களின் அமைப்பு பற்றி எனக்கு தெரியும். எதிரி எங்கள் நிலத்திற்கு வடக்கு பக்கத்தில் அவரது நிலம் உள்ளது . எதிரியின் நிலம் எங்கள் நிலத்தை விட 5 , 6 அடி உயரத்தில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது நான் வீட்டுக்குள் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அப்பாவுடன் வெளியே வாசலில் இருந்தேன் . எங்களுடன் என் சித்தியும் இருந்தார். கொம்பு, தடி, கட்டை ஆகியவை வெவ்வேறு பொருட்கள் என்றால் சரிதான். என் அப்பாவுக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் இல்லை . என் அப்பாவுக்கு குடிப்பழக்கம் இல்லை என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நடந்ததாக சொல்லும் சம்பவம் வீட்டு வாசலில் சுமார் 30 நிமிடம் நடந்தது. நானும், என் சித்தியும் சண்டையை தடுத்தோம் . ஆனால் எங்களால் தடுக்க முடியவில்லை. போலிஸ் விசாரணையில் மேற்படி தகவலை நான் சொன்னேன் . என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் பாறை , மரங்கள் உள்ளது என்றால் சரிதான் . தெற்கு பக்கம் 10 அடி தூரத்தில் ஒரு 6 அடி ஆழமுள்ள கால்வாய் செல்கிறது என்றால் சரிதான். அந்த கால்வாய் மேடு ,பள்ளமாக சீராக இல்லாமல் உள்ளது என்றால் சரிதான்.என் அப்பாவை அடிபட்டவுடன் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு என் சித்தி மற்றும் அருகில் இருந்தவர்கள் அழைத்துச்சென்றார்கள் . என்வீடு ஆத்துவாம்பாடி கிராமத்தில் இருந்து 1 கி.மீ தூரம் உள்ளது என்றால் 2 கி.மீ தூரத்தில் உள்ளது. நாங்கள் நிலத்தில்தான் வீடு கட்டியுள்ளோம் . எங்களை போல அக்கம்

பக்கத்திலும் நிலத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான் . அவர்கள் கூப்பிட்டால் கேட்கும் தூரத்தில் உள்ளது என்றால் சரிதான் . நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் என் தந்தையின் இறப்பிற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் , என் தந்தை அதிக குடிபோதையில் கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தினால் இறந்துவிட்டார் என்று சொன்னால் அதை நான் மறுக்கிறேன்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B. C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.